# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2020 யூலை

## (104) வியாபாரச் சூழல்

**அறிமுகம்:**

இவ்வினாத்தாளானது வியாபாரச் சூழல் பாடத்திட்டத்தில் உள்ள அதிகளவான பகுதிகளை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடம் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதில் பிரதான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் உயர் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள அதே வேளை மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடை அளிக்காத காரணத்தால் சித்தியடையத் தவறியுள்ளனர்.

பரீட்சகர்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு :

## பகுதி A

**வினா இல. 01**

**1.19** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் பற்றிய சிறந்த புரிந்துணர்வு இன்மையால் அதிகளவான பரீட்சார்த்திகளால் வெற்றிகரமாக விடை அளிக்க முடியவில்லை.

**1.20** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருக்கவில்லை. ஒழுக்க நெறிக் கோவை பற்றிய சரியான புரிதல் இன்மையையே இது காட்டுகிறது.

மொத்தத்தில், இவ்வினாவுக்கு பரீட்சார்த்திகள் மிகவும் திருப்திகரமாக விடையளித்திருந்தனர். குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த 40 புள்ளிகளையும் பெற்றிருந்த அதே வேளை பெரும்பாலான பரீட்சார்த்திகள் 26 இற்கும் 35 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இவ்வினாவுக்கு சகல பரீட்சார்த்திகளும் விடை அளித்திருந்தனர்.

## பகுதி B

**வினா இல. 02**

**பகுதி (a)**

சகல பரீட்சார்த்திகளும் இந்தப் பகுதிக்கு விடை அளித்திருந்தனர். ஆனால் குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் தனியுடமை வியாபாரம் ஒன்றின் அம்சங்களை விபரித்திருக்கவில்லை.

**பகுதி (b)**

இந்தப் பகுதிக்கு விடையளிப்பதில் பரீட்சார்த்திகள் தோல்வியடைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தொடர்பாடல் என்றால் என்ன என்பதை சில பரீட்சார்த்திகள் விளங்கிக் கொண்டிருக்க வில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**பகுதி (c)**

இவ்வினா காப்புறுதி செய்யத்தக்க இடர்கள் பற்றி வினவியிருந்தது. வினாவின் இப்பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

மொத்தத்தில், செயலாற்றுகை வெற்றிகரமானது.

**வினா இல. 03**

**பகுதி (a)**

உள்நாட்டு வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தின் பண்புகளை பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்த போதிலும், அவர்களில் அதிகமானவர்கள் இந்த இரண்டிற்கும் இடையிலான தெளிவான வேறுபாட்டைக் குறிப்பிட முனையவில்லை. அவர்கள் பாட விடயத்தைக் காட்டிலும் தமது பொது அறிவைப் பயன்படுத்தியிருந்தமையே குறைந்த புள்ளிகள் பெறக் காரணமாக இருந்தது.

**பகுதி (b)**

அதிகளவானவர்கள் இப்பகுதிக்கு விடையளித்திருந்த போதிலும், வெளிநாட்டு வர்த்தகத்தின் 3 நன்மைகள் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தன. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் விடையை விபரிப்பதற்கான தேவையை அடையாளங் கண்டிருக்கவில்லை. இதுவே அவர்கள் முழுப் புள்ளியையும் பெற முடியாமைக்கான காரணமாக அமைந்திருந்தது.

**பகுதி (c)**

இங்கு, தரப்பட்ட கம்பனியை வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றாகக் கூட்டிணைப்பதன் நன்மைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்ததை இங்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த வினாவுக்கு முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதுமானதாகக் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசியை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது. வேறு சிலரோ அதையும் விட குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**வினா இல. 04**

**பகுதி (a)**

தொழில்முயற்சியாளர் ஒருவருக்குத் தேவையான திறன்கள் இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும், குறிப்பிடத்தக்களவு விடைகள் வெற்றிகரமானதாக அமையவில்லை. குறிப்பிட்டளவான பரீட்சார்த்திகள் திறன்களைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும், அவை பற்றி விபரித்திருக்காத காரணத்தால் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் திறன்களைக் குறிப்பிடக்கூடியதாக இருந்தபோதிலும், பலர் வழங்கிய விளக்கங்கள் குறைபாடுகளைக் கொண்டிருந்த காரணத்தால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

**பகுதி (b)**

தொழில்முயற்சியாண்மையின் நன்மைகள் பற்றி வினவப்பட்ட இந்தப் பகுதிக்கு பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (c)**

இங்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை தோல்விக்கு இட்டுச் செல்கின்ற காரணிகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு வெற்றிகரமாக விடையளிக்கவில்லை என்பதுடன் அளிக்கப்பட்டிருந்த பெரும்பாலான விடைகள் தெளிவற்ற முறையிலும் பொருளற்ற விதத்திலும் காணப்பட்டன.

மொத்தத்தில், பெரும்பாலானவர்கள் உயர் புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை என்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

**வினா இல. 05**

**பகுதி (a)**

பூகோளமயமாதலால் ஏற்படும் இரண்டு வாய்ப்புகளை விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும், அவர்கள் அதனைத் தெளிவாகவும் போதுமான அளவுக்கும் விபரித்திருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் தமது பொது அறிவைக் கொண்டு விடையளித்திருந்தனர். அத்துடன் வினாவுக்கு அளிக்கப்பட்ட விடைகளும் வெற்றியளித்திருக்கவில்லை.

**பகுதி (b)**

வினாவானது சமூகப் பொறுப்பு பற்றிய விடயத்தைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் வினாவானது சரியாக விளங்கிக் கொள்ளப்படவில்லை. ஒட்டுமொத்தச் செயலாற்றுகையும் திருப்திகரமானதாக இருக்கவில்லை. சிலர் வினாவுக்கு விடையளிக்க முயற்சி செய்யக்கூட இல்லை. மொத்தத்தில், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு குறைந்த புள்ளிகளையோ இல்லது எவ்வித புள்ளிகளையும் பெறாமலோ இருந்தனர்.

**பகுதி (c)**

நிறுவனமொன்று தமது வியாபாரச் செயற்பாடுகளில் நிறுவன சமூகப் பொறுப்புடமையை கூட்டிணைப்பதன் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் பற்றி இவ்வினா பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து சிறந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், மொத்தமாகப் பார்க்கும்போது இவ்வினாவுக்காக அளிக்கப்பட்ட விடைகள் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் குறிப்பாக பகுதிகள் (a) மற்றும் (b) இற்கு மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அத்துடன் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

**பகுதி (a)**

இப்பகுதியில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் பற்றி வினவப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். சிலர் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (b)**

அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடை அளிக்கும்போது தவறான விடைகளை அளித்திருந்தனர். தரப்பட்ட கம்பனியை பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக கூட்டிணைப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றிய போதிய விளக்கம் பரீட்சார்த்திகளிடம் காணப்படாமை உறுதியாகத் தெரிந்தது.

**பகுதி (c)**

பரீட்சார்த்திகளிடம் SWOT பகுப்பாய்வு பற்றிய தெளிவான விளக்கம் காணப்படவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். மேலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்காது தவிர்த்திருந்தனர்.

**பகுதி (d)**

தொடர்புடைய நிறுவனம் ஒன்றிற்கு ஏன் வினைத்திறனான போக்குவரத்துச் சேவை முக்கியமானது என்பதற்கான காரணங்களை வினாவின் இப்பகுதி பரீட்சித்திருந்தது. இந்தப் பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர். எனவே, ஒரு குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாத மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றி விபரித்திருந்தனர்.

**பகுதி (e)**

இங்கு, வர்த்தகத்தின் புதிய போக்குகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இப்பகுதிக்கு விடையளித்த பெரும்பாலான பரீட்சார்த்திகள் சிறந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், குறைந்தளவான பரீட்சார்த்திகளால் இப்பகுதிக்கு எவ்வித புள்ளிகளையும் பெற முடியாதிருந்ததையும் வர்த்தகத்தின் புதிய போக்குகள் பற்றி பரீட்சார்த்திகளிடம் போதிய அறிவு காணப்படாததையும் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு 15 புள்ளிகளுக்கும் மேல் பெற்றிருந்ததுடன் மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே மிகக் குறைந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மிக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானோர் இவ்வினாவைத் தவிர்த்திருந்தனர்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக் கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள் :</u>**

(1) வினாத்தாளைப் பெற்றதும், விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்பு அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

(2) ஏஎரி ஸ்ரீ லங்காவினால் வெளியிடப்பட்ட சுய கற்றல் பாடப்புத்தகம் முழுப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கிய சிறந்த வழிகாட்டியாக இருப்பதால் அதனை உயர்ந்தபட்சம் பயன்படுத்துங்கள்.

(3) வினாவைக் கவனமாக வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். ஒரு நேரடியான மற்றும் துல்லியமான விடை எதிர்பார்க்கப்படும்போது தேவையற்ற விளக்கங்களையும் விவரங்களையும் எழுத வேண்டாம்.

(4) விடையளிக்கும்போது நேர முகாமை மிக முக்கியமானதாகும்.

(5) வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

(6) விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டுள்ளதா எனப் பரிசீலிக்கவும்.

(7) வினாத்தாளிலேயே விடைகளை எழுத வேண்டாம். விடைகளை விடைப்புத்தகத்தில் மாத்திரமே எழுதுதல் வேண்டும்.

(8) கடந்த கால வினாத்தாள்களுக்கு விடையளித்துப் பழகுவதன் மூலம் உங்களால் பாட அறிவையும் விடையெழுதும் ஆற்றலையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

(9) அறிவை இற்றைப்படுத்திக் கொள்வதற்காக அண்மையில் வெளிவந்த சஞ்சிகைகள், கையேடுகள், செய்தித்தாள்கள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

(10) பரீட்சையில் தோல்வியடையக்கூடும் என்பதால் எந்த வினாவையும் கைவிட முயற்சிக்க வேண்டாம்.

(11) சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடைகின்ற ஆகக்கூடிய எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.